**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.48
https://ngmtamil.in/

# பழந்தமிழர் நீர் மேலாண்மையும் வேளாண் மரபு நுட்பங்களும்

**சி.இலக்கியப்பிரியா ,**

முனைவர் பட்ட, ஆய்வாளர், தமிழ்த்துறை,

நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி- 642001

தொலைபேசி எண்:8248780637, மின்னஞ்சல்: ilakkiyasivakumar1823@gmail.com

**முனைவர் க. தனலட்சுமி,**

உதவிப்போசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி- 642001

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்ச் சமுகம் தொல்பழங்காலம் தொட்டே இயற்கையோடு இயைந்த வாழ்வியலைக் கொண்டு திகழ்ந்தது. ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் சமூகத் தன்னிறைவைத் தீர்மானிப்பதில் வேளாண்மையும், அதற்கு அடிப்படையான நீர் மேலாண்மையும் முதன்மைப் பங்கு வகிக்கின்றன. சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவற்றைத் தரவுகளாகக் கொண்டு, பழந்தமிழர்கள் கையாண்ட நீர்ச் சேமிப்பு முறைகள், மண் வளப் பாதுகாப்பு, நீர் நிலைக் காவலர்களின் பங்கு மற்றும் உழவுத் தொழிலின் மரபுசார் நுட்பங்களை விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**சமூக வளர்ச்சியின் அடிப்படைத் தேவைகள்**

எந்தவொரு சமுதாயத்தின் நீடித்த வளர்ச்சிக்கும் சமூகத் தன்னிறைவிற்கும் அடிப்படைத் தேவைகளாக அமைபவை உணவு, உடை, இருப்பிடம் (உறையுள்) ஆகிய மூன்றே ஆகும். சமூகவியலாளர்களின் கருத்துப்படி, ஒரு சமூகத்தின் பொருளாதார நிலைப்பாடு என்பது இம்மூன்றின் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. மேலும், 'ஒரு நாட்டின் வறுமையைக் குறிக்கும் காரணிகளுள் முதல் மூன்று இடங்களாக:

1. பயன்பாட்டிலுள்ள நிலத்தின் அளவு
2. மனிதன் வாழும் வீட்டின் தன்மை
3. சராசரியாக ஒரு நபர் அணியும் ஆடை

ஆகியவை சுட்டப்படுகின்றன. இங்கு, 'நிலத்தின் அளவு' என்பது வெறும் நிலப்பரப்பைக் குறிக்காமல், அந்நிலத்தில் மேற்கொள்ளப்படும் வேளாண் தொழிலையும், அதன் வழியிலான உணவு உற்பத்தியையும் குறிப்பதாகும். எச்சமுதாயத்திலும், ஒவ்வொரு மனிதனுக்கும் நிரந்தர வருவாய், நிலையான இருப்பிடம், தேவையான உடை என்பன தவிர்க்க இயலாதவையாகின்றன. இன்று உலக நாடுகள் யாவும் இவற்றின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு நவீனத் திட்டங்களைச் செயலாக்கி வரும் வேளையில், பழந்தமிழர் தங்கள் மரபு வழி அறிவைக் கொண்டு இதில் அடைந்த தன்னிறைவை ஆராய வேண்டியது அவசியமாகிறது.

**உணவின் தேவையும் பற்றாக்குறையின் விளைவும்**

அடிப்படைத் தேவைகளில் முதலாவதான உணவை உற்பத்தி செய்வதிலும், அதில் தன்னிறைவு அடைவதிலும் பழந்தமிழர் மேற்கொண்ட வேளாண்மைச் செயல்பாடுகள் உலகத் தரம் வாய்ந்தவை.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு" (குறள். 734)

என்பார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். ஒரு நாட்டின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் பசியில்லா நிலையே அடிப்படை. பசி என்பது மனிதனைப் பிணிக்கும் கொடிய நோய் போன்றது; அதுவே நாட்டின் பகைக்கும் காரணமாகிறது. பசியில்லா மனிதரிடத்தேதான் ஆரோக்கியமான உடலும் ஆரோக்கியமான மனமும் தோன்றும். அவற்றுள்வழி ஆரோக்கியமான சிந்தனைகளும் முற்போக்கு எண்ணங்களும் வெளிப்பட்டுத் திகழும். அவ்வகையான நற்சிந்தனை கொண்ட சமூகம் மட்டுமே நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கான வழிகளை அமைப்பதில் முனைப்புக் காட்டும். எனவேதான், காப்பியப் புலவர்களான இளங்கோவடிகளும் சாத்தனாரும் நாட்டை வாழ்த்தும் பொழுது,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க" (சிலப். 5:72-73)

“பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்க” ( மணி. 1:70-71)

என ஒரே குரலில் வாழ்த்தினர். பழந்தமிழர் வாழ்வில் உணவுக்கு அளிக்கப்பட்ட முதன்மையை இலக்கண நூலான தொல்காப்பியமும் உறுதிப்படுத்துகிறது. தொல்காப்பியர் கருப்பொருளைப் பட்டியலிடும்போது,

"தெய்வம் உணாவே மாமரம் புள் பறை" (தொல். 964)

என்று, தெய்வத்திற்கு அடுத்த நிலையிலேயே உணவை வைத்திருப்பதோடு,

"நெய்நெறி வகையின் எண்ணகை உணவின்" (தொல். 1579)

என்று உணவின் பல்வேறு சுவை மற்றும் வகைகளையும் சுட்டுகிறார். இதனால்தான், உலகமே மற்ற தொழில்களைத் தேடிச் சுழன்றாலும் உழவுத் தொழிலின் பின்னேதான் வர வேண்டும் என்பதை உணர்ந்து,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்"

"உழந்தும் உழவே தலை" (குறள். 1031)

என்றார் வள்ளுவர்.

**நீரின் இன்றியமையாமையும் சமகால அவலமும்**

மனிதர்கள் உணவு உண்ணாமல் கூடச் சில நாட்கள் உயிர் வாழ்ந்திட இயலும். ஆனால், நீரினைப் பருகாமல் இருப்பது என்பது எளிதான செயல் அல்ல. உலகம் உய்யவும், உயிர்கள் தழைத்து வாழவும் மிக மிக அவசியம் தேவையானது நல்ல தண்ணீராகும்.

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே

பசும்புல் தலைகாண்ப தரிது." (குறள். 16)

என்ற குறளின்படி, வான்பொழியும் மழைநீரே உலக உயிர்ப்பு முழுமைக்கும் அடிப்படையாய் அமைகிறது. அத்தகைய நீராதாரத்தைத் தமிழ் மக்கள் தொன்றுதொட்டுத் தங்கள் உயிரினும் மேலானதாகப் போற்றி வளர்த்துள்ளனர்.

ஆனால், இன்றைய சமகால நிலை முற்றிலும் கவலைக்கிடமாக உள்ளது. ஏறத்தாழ 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் நம் கிராமங்களிலும் நகரங்களிலும் ஆறு, ஏரி, வாய்க்கால் போன்ற இயற்கை நீர் நிலைகளில் கைகளாலேயே நீரினை நேரடியாக அள்ளிக்குடிக்கக் கூடிய தூய்மையான நிலை மக்களிடையே இருந்து வந்தது. இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தொழிற்சாலைக் கழிவுகளாலும், மனிதப் பேராசையாலும் நீர் நிலைகள் மாசடைந்து, இன்று பாட்டில்களில் அடைக்கப்பெற்ற தூய்மைப்படுத்தப்பட்ட நீரினை, பாலின் விலையைவிடக் கூடுதலாக விலைகொடுத்து வாங்கி அருந்த வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. நம் முன்னோர்களால் மிகவும் போற்றிப் பாதுகாப்பெற்றுப் பயன்படுத்தப்பட்டு வந்த நீரை, நாம் மதிக்கத் தவறியதால் ஏற்பட்ட விளைவுதான் இன்றைய சுற்றுச்சூழல் மற்றும் தண்ணீர்ப் பஞ்சம் ஆகும்.

**பழந்தமிழர் நீர்ச்சேமிப்பு முறைகளும் நீர்த்தேக்கங்களும்**

மழைநீரைச் சேமித்து, சேமித்த நீரைத் திறம்படப் பயன்படுத்துவதன் மூலமே தமிழகத்தின் வேளாண்மை பெரிதும் நடைபெற்றது. மழைநீர் அல்லது ஆற்றுநீரைத் தேக்கி வைப்பதற்காக ஏரி, குளம், குட்டை, மடு, மதகு, அணை போன்ற பல்வேறு நீர் நிலைகளை அமைக்கும் தொழில்நுட்ப முறைகள் சங்க காலம் தொட்டே வழக்கில் இருந்து வந்துள்ளன.

பழந்தமிழர்கள் மழைநீரை வெறும் தண்ணீராகப் பார்க்காமல், 'அமிழ்தம்' என்று கருதினர். சங்க காலத் தமிழர்கள் 'முந்நீர் விழவு' என நீருக்கு விழா எடுத்து நீர் நிலைகளைக் கொண்டாடினர். மழைநீரைச் சேகரித்து நாட்டை வளம் பெறச் செய்த தமிழர்களின் நீர் மேலாண்மை அறிவை, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மிக அழகாகப் பதிவு செய்துள்ளார்:

"இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்

பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப

மழைபிணித்(து) ஆண்ட மன்னவன்..." (காடுகாண் காதை. 27-29)

இப்பாடலடியில் வரும் "மழை பிணித்து ஆண்ட மன்னவன்" என்ற தொடர் மிகக் கூர்மையானது. இடியுடன் பெய்யும் பெருமழை நீரினை வீணாகக் கடலில் கலக்கவிடாமல், ஏரி மற்றும் குளங்களில் கட்டிப்போட்டு (பிணித்து), அவற்றை நெறிப்படுத்தித் தக்கமுறையில் பாசனத்திற்குப் பயன்படுத்தி நாட்டை வளம் பெறச் செய்யும் மன்னனே சிறந்த ஆட்சியாளன் என்பதாகும்.

**மண் வளப் பாதுகாப்பும் வேளாண் நுட்பமும்**

மண் வளத்தின் தன்மையைப் பாதுகாப்பதில் மழை வளத்தின் பங்கு முதன்மையானது. வான் பொய்த்தால் மண் தரிசாகும் என்பதை உணர்ந்ததால்,

"வானம் வாய்க்க மண்வளம் பெருகுக" (மணி. 19:151)

என்று வாழ்த்தும் ஒலி பழந்தமிழகத்தின் மங்கல ஒலியாகத் திகழ்ந்தது. மக்கள் தம்மைத் தாமே வருத்திக் கொண்டு, கஷ்டப்பட்டுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அளவில் வறண்டு இருக்கும் நாடு சிறந்த நாடாகக் கருதப்படமாட்டாது. உழைப்புக்கு ஏற்ற பலனைத் தரும் "நாடா வளம்" (இயற்கையாகவே வளம் கொழிக்கும் தன்மை) கொண்ட நாட்டிற்கு அதன் மண்வளமே முக்கியப் பங்காற்றுகிறது. இதனை இலக்கியங்கள்,

"நிலம்பயம் பொழிய" (பதி. 69:13)

என்று சுட்டுகின்றன. பழந்தமிழர் வாழ்வியலில் நிலமும் - நீரும், உடலும் - உயிரும் போன்றதாக நெருங்கியத் தொடர்புடையதாகக் கருதப்பட்டன. நிலத்தின் ஈரப்பதத்தையும் வளத்தையும் நிரந்தரமாகப் பாதுகாக்க அவர்கள் விளைநிலங்களின் இடையிடையே சிறுசிறு குளங்களையும் குட்டைகளையும் ஏற்படுத்தினர் (குறு. 8:1,2). இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்ததோடு, விளைநிலங்கள் தங்களின் இயற்கைத் தன்மையில் மாறுபடாமலும், வேளாண் வளம் குன்றாமலும் தொடர்ந்து மகசூலைத் தந்தன. **முடிவுரை**

சுருக்கமாகக் கூறின், பழந்தமிழர்களின் ஒட்டுமொத்த வாழ்வியலும் நீர்ச் சேமிப்பையும் வேளாண்மையையும் மையமாகக் கொண்டே சுழன்றது. வான்பொழியும் மழையைத் தக்க நெறிகளோடு ஏரி, குளங்களில் தேக்கி, மண்ணின் வளம் காத்து, பசியில்லாப் பெருவளச் சமுதாயத்தை அவர்கள் உருவாக்கினர். அன்று கைகளோடு அள்ளிக் குடித்த நீர், இன்று பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்கப்படும் வணிகப் பொருளாக மாறியதற்கு நம்முடைய அலட்சியமே காரணம். பழந்தமிழரின் நீர் மேலாண்மை மரபையும், சிலம்பும் குறளும் காட்டும் நீர்ச் சேமிப்பு நுட்பங்களையும் மீளாய்வு செய்து, நமது ஏரி, குளங்களைத் தூர்வாரிப் பாதுகாப்பதே இன்றைய தண்ணீர்ப் பஞ்சத்திற்கும், உழவர் நல மேம்பாட்டிற்கும் நாம் கண்டடைய வேண்டிய உண்மையான தீர்வாகும்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**துணைநூல் பட்டியல்**

[1.] இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்), சாரதா பதிப்பகம், சென்னை, பதிப்பு :2010.

[2.] ஔவை துரைசாமி பிள்ளை (உரை), பதிற்றுப்பத்து மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, பதிப்பு : 2002.

[3.] பரிமேலழகர் (உரை), திருக்குறள் மூலமும் உரையும், பூம்புகார் பதிப்பகம், சென்னை, பதிப்பு : 2015.

[4.] இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் (மூலமும் அரும்பதவுரையும்), உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, பதிப்பு : 2008.

[5.] சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை மூலமும் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, பதிப்பு : 2012.

[6.] டாக்டர். மா. இராசமாணிக்கனார், தமிழக வரலாறும் பண்பாடும், நியாஸ் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2014.

[7.] பேரா. கா. நமச்சிவாயம், பழந்தமிழர் வாழ்வும் வரலாறும், பாரி நிலையம், சென்னை, பதிப்பு : 2018.